கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 10
பங்குனி 11 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## யூ.என்.ஓ. புதிய காரியதரிசி பாப்பரசரைச் சந்தித்தார்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் புதிய காரியதரிசி திரு. வல்ட்ஹிம் அவர்கள் சென்ற மாதம் 6-ம் திகதி வத்திக்கான் சென்று பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரைச் சந்தித்து உலக சமாதான கருமங்கள் பலவற்றைப்பற்றிக் கலந்து ஆலோசித்துக் கொண்டார். உலகசமாதானம், முன்னேற்றம் ஆதியாம் கருமங்களில் தளராத ஊக்கமுடைய பரிசுத்த தந்தை புதிய காரியதரிசி அவர்களுக்கு அவரது முயற்சிகளில் பூரண ஆதரவு நல்க ஆதத்தமாயிருப்பதாக வாக்களித்திருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் கத்தோலிக்க திருச்சபையும் மனித உரிமைகளைக் காப்பாற்ற அயராது உழைத்துவர உள்ள கடமைப்பாடுகளைச் சுட்டிக்காட்டி, கத்தோலிக்க திருச்சபை யாவற்றிலும் பெரிதாகத் தேவ உரிமைகளைப் பாதுகாக்கப் பொறுப்புள்ளதாயினும் மனித உரிமைகளுக்கு ஏற்படும் குறைபாடுகளை நீக்குவதிலும் பொறுப்புடையது என பரிசுத்த தந்தை குறிப்பிட்டார்.

## புதிய கருதினல்மார்

பரிசுத்தபாப்பரசர் தமது புதிய கருதினல்மாரின் பெயர்களை அதிகாரபூர்வமாக எப்பொழுது அறிவிப்பாரென ரோமைநகர் ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம்இருக்கிறது. அவர்களின் பெயர்ப்பட்டியல் தயாராகிவிட்டது. இம்முறை அவர்கள்தொகை முப்பதாய் இருக்குமாம். புதிய கருதினல்மாருடன் கருதினல்மார் திருச்சங்க அங்கத்தவர்களின் தொகை 151ஆக விருக்குமாம். 1586-ம் ஆண்டு 5ஆம் சிக்ஸ்துஸ் பாப்பானவர் திருத்தஞ்செய்த அமைப்பின்படி கருதினல்மார் திருச்சங்கம் 70 குருசிரேஷ்டர்களைக் கொண்டிருக்க வேண்டும். ஆனல், 23-ம் அருளப்ப பாப்பானவர் காலஞ்சென்றபோது மொத்தமாக 82கருதினல்மார் இருந்தனர். இவர்களில் 29பேர் இத்தாலியர். இப்போதுள்ள 120கருதினல்மாருள் 36பேர்மட்டுமே இத்தாலியர். புதிய கருதினல்மாரில் ஐந்து அல்லது ஆறு பேரையே இத்தாலியர்கள் கொண்டிருப்பார்கள். இவர்களின் பெயர்ப்பட்டியலிலே முதலிடம் வகிக்கவிருப்பவர் சந்தேகமின்றியே பாப்பரசரின் உற்றநண்பரும், ஜெனேவாநகர் அதிமேற்றிராணியாருமான 68வயதுடைய பிருங்கோ கொஸ்ரா ஆண்டகையேயென நம்பப்படுகிறது. இன்றைய நிலைமையில் அடுத்த பாப்பானவர் ஓர் இத்தாலியராய் இருக்கமாட்டாரென இத்தாலிய வட்டாரங்களில் இப்பொழுதே முதன்முறையாக நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

## வங்காளதேச மேற்றிராணிமாரின் வத்திக்கான் விஜயம்

வங்காளதேச டாக்காநகர அதிமேற்றிராணியாராகிய கன்குலி அடிகளாரும், டினஜ்பூர்நகரமேற்றிராணியாராகிய ரொசாறியோ அடிகளாரும் சென்றவாரம் வத்திக்கானுக்கு விஜயஞ்செய்திருந்தனர். அங்கே அவர்கள் பாப்பரசர் 6-வது சின்னப்பரையும், அரசகரும பிரதம செயலாளர் விலோ அடிகளாரையும், விசுவாசப் பரப்புதல் காரியாதிகாரி விக்னடோலி அடிகளாரையும்சந்தித்துத் தமது நாட்டின் நிலைமையை அவர்களுக்கு விளக்கியிருக்கின்றனர். அத்துடன் பல கத்தோலிக்க தர்மஸ்தாபனங்களை ஒன்றிணைக்கும் "கோர்யூனும்"நிறுவனத்துடனும் தொடர்புகொண்டு தமது நாட்டுக்கு அவசியம் தேவைப்படும் உதவிகளையும் அறிவித்திருக்கின்றனர்.

## போலாந்தின் கத். திருச்சபைக்கு மேலும் சுயாதீனம்

யேசுசபைச் சந்நியாசிகளின் ரோமாபுரித் தலைமைப்பீடத்திலிருந்துவரும் செய்திகள் இன்று போலாந்து தேசத்தில் கத். திருச்சபை சுயாதீனத்துடன் தொண்டுபுரியத் தக்க நிலைமை ஏற்பட்டிருக்கின்றதென உறுதிகூறுகின்றன. போலாந்து மக்களின் 90சத வீதத்தினர் கத்தோலிக்கரே. பலகாலமாகப் புதிய தேவாலயங்கள் கட்டியெழுப்பத் தடைஏற்பட்டிருந்ததினல் இப்போது அங்குள்ள சனத்தொகைக்குப் போதியளவு தேவாலயங்கள் இல்லாதிருப்பது உண்மையே. ஆயினும், தேவாலயங்கள், குருமடங்கள், குருமாணவர் கல்லூரிகள் வைத்திருப்பதற்குத் திருச்சபைக்கு இன்று இங்கே உரிமையுண்டு. புதிய கோவில்கள் கட்டுவதற்கு மேலும் தடைகள் இருக்கமாட்டாதென நம்பப்படுகிறது.

## ரொடீசிய பிரச்சினைதீர யோசனைகள்

ரொடீசியா தேசத்தில் தலைவர் இயன் சிமித் நிலைநாட்டிய சட்டவிரோத ஆட்சியினல் இங்கிலாந்துக்கும ரொடீசிய தேசத்துக்கும் ஏற்பட்ட குழப்ப நிலைமையில் ஒரு வகை சமரசம் ஏற்பட ஆங்கில வெளிநாட்டு மந்திரி ஹோம்ஸ் பிரபு கூறியிருக்கும் யோசனைகளை ரொடீசிய தேச மேற்றிராணிமார் சபையினர் தேறப் பரிசீலனை செய்தபின் அந்த யோசனைகள் ஏற்றுக் கொள்ளத்தக்கனவல்ல என தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றனர். ஆங்கில மந்திரியின் யோசனைகள் ஆளும் வெள்ளையர்களின் இன்றைய நிலைமையை உறுதிப்படுத்துவதாயிருப்பதாகவும், நிறத்தோலுடைய பெரும்பான்மை மக்களுக்கு நீதிஅளிக்கப்படவில்லையெனவும் அவர்கள் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றனர். கத்தோலிக்க மேற்றிராணிமாருடைய அபிப்பிராயத்துக்கு அப்பிரிவிலுள்ள மறுகிறிஸ்தவசபை அதிகாரிகள்ஆதரவு அளித்துள்ளனர்.

## வட அயர்லாந்து கலகம் இங்கிலாந்தில் பரவுமா?

வடஅயர்லாந்து பெல்பஸ்ற் மாகாணத்தில் ஆங்கில துருப்புக்களின் செயல்களால் மடிந்த சில கத்தோலிக்கர்களின் மரணத்துக்குப் பழிவாங்கும்பான்மையில் அயர்லாந்து றிப்பப்ளிக்கன் (புரட்சி) துருப்புகளின் கை ஓங்கி இங்கிலாந்து இராணுவ பயிற்சி நிலையமாகிய அல்டர்ஷொட்டின் அருகாமையில் எறியப்பட்ட குண்டின் விளைவாக ஆறுபேர் பலியாகினர். மரணமடைந்தவர்களில் ஒருவர் ஒரு கத்தோலிக்க குரு. 38வயது நிரம்பிய ஜெறுட் வெஸ்ரன் சுவாமியாரே அவர். துணிவுடன் அவர் இராணுவவீரர் மத்தியில் செய்துவந்த தொண்டுக்காக அவருக்குச் சென்றவாரம் எம். பி. ஈ. பட்டம் அளிக்கப்பட்டது. அடுத்த வாரம் அவர் மீளவும் பெல்பஸ்ற்சென்று கத்தோலிக்கர் புரொட்டஸ்தாந்தினர்—ஆங்கில இராணுவத்தினர் மத்தியில் தொடர்ந்து சேவை புரிவதற்கு ஆவலுடன் இருந்தார் என அவரை அறிந்தவர்கள் கூறுகின்றனர்.

## ஸ்பெயின்தேச அரசியல்முறை இணையில்லாச் சிறப்புடையது

— பிருங்கோ

ஸ்பெயின் தேசத்தில் இன்று நிலவிவரும் அரசியல் முறை சமுதாய அடிப்படையில் நிலைநாட்டப்பட்டிருக்கிறதென்றும், அம்முறை மேற்கு ஐரோப்பிய பிறதேசங்களில் விளங்கிவரும் பாராளுமன்ற ஆட்சிமுறையிலிருந்தும் மக்கள் ஜனநாயகம் என்று அழைக்கப்படும் கொமியூனிஸ்த முறையிலிருந்தும் சிறந்ததென்றும் ஸ்பெயின்தேச அதிபர் ஜெனறல் பிருங்கோ அண்மையில் கூறியிருக்கின்றார். மேலும் அத்தேசத்தில் கத்தோலிக்க திருச்சபையும் தமது அரசாங்கமும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்து வந்ததன் பயன்களை எடுத்துக்காட்டி அந்நிலைமையில் சிலர் மாற்றங்களைப் புகுத்த எடுக்கும் முயற்சிகளினல் நாட்டுக்கு நன்மையின்றித் தீமையே விளையுமெனவும் அறிவித்திருக்கின்றார் இதுகாலவரையும் கத்தோலிக்க திருச்சபைக்கும் பிருங்கோ அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டிருந்த உடன்படிக்கையை மாற்றி அமைக்க பலர் கொண்டுள்ள விருப்பத்தையே அதிபர் பிருங்கோ குறிப்பிட்டார்.

## மேலும் ஒரு குருவானவரை தென் ஆபிரிக்க அரசாங்கம் அகற்றியது

வெள்ளையர்கள் சிறுபான்மையினராயினும் அங்கே ஆட்சி புரிந்துவரும் தென் ஆபிரிக்கதேசத்தின் அரசாங்கம் அங்குள்ள நிறத்தோலுள்ள மக்களுக்கு உரிமைகளை மறுக்கும் அநீதியான சட்டங்களை வகுத்து வருவதை யாவரும் அறிவர். இந்த அநீதிகளை எதிர்க்கும் யாவரும் தண்டிக்கப்பட்டுவருகின்றனர், அசாங்கத்துக்கு எதிராக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்கின்றார் என்ற குற்றஞ் சாட்டப்பட்டு பிரான்சீஸ்கன்சபைக் குருவானவர் டெஸ்மண்ட் சுவாமியார் ஜொகானஸ்பேர்க் நகரில் வீட்டுமறியலில் இருக்கின்றார். சென்றவாரம் மேலும் ஒரு பிரான்சீஸ்கன் சபைக் குருவானவர் அந்நாட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்கின்றார். வண. வில்பிறட் ஜாக்சன் சுவாமியாரே அவர்.

## இலங்கைக் கத்தோலிக்க நூதனசாலை ஆயத்தமாகிறது

கத்தோலிக்க நூதனசாலையொன்றை இலங்கையில் நிறுவ ஆயத்தங்களைத் தயார் செய்ய நியமிக்கப்பட்ட குழுவினர் அவ்வேலை துரிதமாய் நடைபெற்று வருகின்றதென அறிவித்திருக்கின்றனர். இலங்கைக் கத்தோலிக்கருடையதெனக் கூறத்தகும் பண்பாட்டைச் சுட்டிக்காட்டும் பொருள்கள் நாட்டின் பலபாகங்களிலும் காணக்கிடைக்கின்றதெனவும் பழையநூல்கள், பாடல்கள், சுரூபங்கள், ஆடைகள், சித்திரங்கள் பக்திப்பொருட்கள் முதலியன சிற்சில இடங்களில் ஒன்று சேர்க்கப்படுகின்றதெனவும் அவர்களது அறிக்கை கூறுகின்றது. வேலையைத் துரிதப்படுத்துவதற்கு மக்களின் பார்வைக்குச் சுலபமான ஓர் இடம் இதற்கென விரைவில் குறிக்கப்படவேண்டுமெனவும் அவர்கள் கேட்டிருக்கின்றனர்.

## தடுப்பு மறியலில் உள்ளவர்க்காகப் பிரதமருக்கு விண்ணப்பம்

அகில இலங்கைக் கத்தோலிக்க சங்கம் சென்ற வாரம் நடாத்திய கூட்டத்தில் இலங்கையில் அண்மையில் நடந்த பயங்கரவாத இயக்கத்தில் சம்பந்தப்பட்டவரெனத் தடுப்பு மறியலில் இன்னும் வைத்திருக்கப்பட்டுவரும் இளைஞர் சார்பாகப் பிரதமருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பி வைக்க முடிவுசெய்திருக்கின்றது. சட்டரீதியான விசாரணைகளை விரைவில் முடிக்கவேண்டிய அவசியத்தையும், திண்மையான பயங்கரவாதிகளுடன் மற்றெல்லோரையும்கூட வதிந்துவர வைப்பதினல்வரும் ஆபத்தையும் அவ்விண்ணப்பத்தில் சுட்டிக்காட்டப்படும்.

## மொறட்டுவ புனித செபஸ்தியார் கல்லூரியின் 33-வது பழைய மாணவ குரு

கொழும்பு அதிமேற்றிராசனப் பிரிவிலுள்ள மொறட்டுவாப் பகுதியின் கத்தோலிக்கரின் வேதவிசுவாசம் அந்நகரின் பிரதம கத்தோலிக்க கல்லூரியாக விளங்கும் புனித செபஸ்தியார் கல்லூரி அண்மையில் அதன் பழைய மாணவர் தொகையில் 33-வது குருப்பிரசாதியை அடைந்துகொண்ட கௌரவத்தினல் துலாம்பரம் அடைந்திருக்கின்றது. இவ்வாறு தமது பிரிவுக்கும், கல்லூரிக்கும் கீர்த்தி அளித்த குருவானவர் வண. மரியஸ் பீரிஸ் சுவாமியாரே. மகிழ்ச்சிக்குரிய இச்சம்பவம் இரு வாரங்களுக்குமுன் அக்கல்லூரியில் மிகஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. பள்ளிக்கூட வளவில் அழகாக அமைக்கப்பட்டுள்ள லூர்து கெபிப் பீடத்தில் புதிய குருவானவரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதன்பின் அன்று நாள் முழுவதும் பழைய மாணவர்களும் இன்றைய பிள்ளைகளும் பலவகை விளையாட்டுகளிலும் பங்குபெற்று சந்தோஷித்துக் கொண்டனர். பள்ளிக்கூட வளவிலுள்ள லூர்துகெபிநிறுவப்பட்ட 25ஆண்டு நிறைவும் அவ் வைபவத்தின் சிறப்புக்கு மேலும் அழகூட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சத்தியவேத பாதுகாவலன்

# நேர்மை வேண்டும்

தவக்கால ஞாறெடுக்கங்கள் ஆரம்பமாக எமது வாழ்க்கையைச் சோதித்துப் பார்க்க வேண்டிய நேரம் வருகின்றது. திருவுரைகளைக் கேட்பதும் பாவசங்கீர்த்தனம் செய்வதும் வருடாவருடம் நாம் கடைப்பிடித்துவரும் வழக்கங்கள். ஆனால், இவை எம் வாழ்க்கையில் ஒரு திருத்தத்தை ஏற்படுத்துகின்றனவா என்பது சிந்திக்கவேண்டிய விஷயம்.

அப்படி ஒரு திருப்பம் இல்லாவிட்டால் அதற்கு ஒரு காரணம் நாம் எமது பாவங்களை, தவறுகளை உணர்ந்திருந்தபோதிலும் அவற்றுக்கு சாக்குப் போக்குகள் சொல்ல எத்தனிக்கிறோம். ஒரு தீமையை செய்தமைக்கு அல்லது ஒரு நன்மையைச் செய்யத் தவறியமைக்கு நாம் வருந்துவதாகக் கூறிக்கொண்டு அதே சமயத்தில் எமது செய்கைக்குச் சாதகமான பல நியாயங்களைக்கூறி எம்மையே ஏமாற்றிக் கொள்ளுகிறோம்.

15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த தோமஸ் அகெம்பிஸ் என்னும எழுத்தாளர் இத்தகைய சாக்குப் போக்குகளைக் கடுமையாகக் கண்டிக்கிறார். "நாம் பன்முறை தீங்கு செய்கிறோம்"என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

எல்லாவற்றையும் குறைவறச் செய்யும் திறமை ஒருவருக்குமில்லை. நாம் தவறுகள் பல செய்ய நேரிடும். ஆனால், அத்தவறுகளை நேர்மையாக ஏற்றுக் கொள்ளும் துணிச்சலின்றி அவற்றுக்குப் பல போலி நியாயங்களைக் கற்பித்துப் பிறருக்குக் கூறுகிறோம் பிறரை ஏமாற்றுகிறோமோ இல்லையோ, எம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம்.

நடந்து முடிந்தவற்றுக்கு நியாயங்கள் கூறிக்கொண்டிருப்பதைவிட்டு, இன்னும் எத்தனையோ புதிய காரியங்களில் எமது நேரத்தைச் செலவிட வேண்டும் என்று இறைவன் விரும்புகிறார்.

எமது தவறுகளை, எமது பலவீனத்தை உணரும் போது, அவற்றை நேர்மையாக ஏற்றுக்கொள்ளும் போது, அவற்றைத் திருத்துவதற்கு வழிபிறக்கும்.

எமது செய்கைகளை, அவற்றின் நோக்கங்களை ஆராய்ந்து உணர்ந்தால்தான் நாம் பிறருடைய குற்றங்களை மன்னிக்க முடியும். அப்போது நாம் மற்றவரைப்போல் பாவிகள் அல்ல என்ற காரணத்துக்காக இறைவனுக்கு நன்றி செலுத்த மாட்டோம். நாம தவறிப் போகாமல் எம்மைப் பாதுகாக்குமாறு அவரைத் தாழ்மையுடன் வேண்டுவோம்.

## பூசை வழிகாட்டி
### பங்குனி மாதம் — 1972

12. ஞாயிறு: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: 1சாமு. 16: 1, 6—7, 10—13
எபே. 5: 8—14
அரு. 9: 1—41 (1, 6—9, 13—17, 34—38).

13. திங்கள்: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: இசை. 65: 17—21
அரு. 4: 43—54.

14. செவ்வாய்: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: எசெ 47: 1—9, 12
அரு. 5: 1—3, 5—16.

15. புதன்: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: இசை. 49: 8—15
அரு. 5: 17—30.

16. வியாழன்: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: யாத். 32: 7—14
அரு. 5: 31—47.

17. வெள்ளி: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: ஞான. 2: 1, 12—22
அரு. 7: 1—2, 10, 25—30.

18. சனி: புனித சூசையப்பர் [வெ]
வாசகங்கள்: 2சாமு. 7: 4—5, 12—14, 16
உரோ. 4: 13, 16—18, 22
லூக். 2: 41—51.



# இறைவாக்கு வழிபாடு

தவக்கால 4ஆம் ஞாயிறு

# தேர்வின் மறைபொருள்

**முன்னுரை:**

கடவுள் தமக்குத்தொண்டு செய்ய வேண்டியவர்களைத் தாமே தெரிந்தெடுத்துக் கொள்கிறார்.

**வாசகங்கள்:**

சாமு. 16:1,6—7,10—3 —கடவுள் தாவீதைத் தெரிந்தெடுத்தார்; இறைவாக்கினரான சாமுவேல் அவரை அரசனாகத் திருநிலைப்படுத்தினர். எபே. 5: 8—14— நாம் ஒரு காலம் இருளில் வாழ்ந்தோம. இப்பொழுதோ கிறிஸ்துவின் ஒளியைப் பெற்றுள்ளோம். அரு. 9: 1—41: குருடனைகப் பிறந்த மனிதன் இயேசுவின் வல்லமைக்குச் சான்று பகர்கின்றான்.

**திருவுரைக்குறிப்பு:**

ஆயர்குலச் சிறுவனான தாவீதும், பிறவிக்குருடனும் இறைவனின் மீட்புத்திட்டத்தில் மிகச்சிறப்பான இடம பெறுவர்என எவரும் கருதியிருக்க முடியாது. ஆனால், அவர்கள் காலததில் வாழ்ந்த பல்லாயிர மக்களிடையே இருந்து கடவுள் அவர்களையே தெரிந்தெடுத்தார். அவர்களிடம் சில குறிப்பான குணவியல்புகள் இருந்தன. கடவுளின் மாட்சிக்காகவும், தங்களுடையவும் பிறருடையவும் நலனுக்காகவும் அவற்றைப் பயன்படுத்தும் வாய்ப்பைக் கடவுள் அவர்களுக்குக் கொடுத்தார். நமது ஞானஸ்நானத்தின்போது ஆண்டவரின்ஆவி நம்மை ஆட்கொண்டது. கடவுள் தம் திருமகனைப் பின் செல்பவர்களாக நம்மைத் தெரிந்தெடுத்தார் தமது மீட்புத் திட்டத்தைச் செயல் படுத்துவதில் தம்முடன் ஒத்துழைப்பதற்கு அவர் நமக்கு வாய்ப்பைத் தந்துள்ளார். நம்மைப் பொறுத்தமட்டில், நாமும் நம் அன்றாட வாழ்வில் கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பதென்னவென்று அறிந்து அதன்படி செயலாற்ற முன்வரவேண்டும். அப்பொழுது தான் கடவுளின் அழைப்புக்கேற்ப நாம் ஒளியின் மக்களாய்த் திகழ்வோம்.

இ. மரியவளன்

## வட அயர்லாந்துக்கு உதவும் வகை

வட அயர்லாந்தில் தோன்றியிருக்கும் நிலைமையில் உலக கத்தோலிக்கர் உதவி புரியக் கூடுமானால் அது அவர்களது செபத்தினாலேயே. ஆகவே, இங்கிலாந்து தேசத்தில் இம் மாசம் 13-ம்திகதி வடஅயர்லாந்து சமாதான செபதினமாக அனுசரிக்கப்பட்டது. பேர்மிங்காம பிரிவு அதிமேற்றிராணியார் அன்று செய்த பிரசங்கத்தில்: வடஅயர்லாந்திலுள்ள பயங்கர நிலைமை மாறி சமாதானம் நிலவ முன்னிலும் இரட்டித்த பலத்துடன் செபிக்குமாறு கேட்டுக் கொண்டார். இவ்வாறு எங்கும் செபமே துணையாகக் கோரப்பட்டிருக்கின்றது. கில்கெனிப்பிரிவு மேற்றிராணியார் பேர்ச் அடிகளார் அயர்லாந்து மக்களை கோபத்தைத் தவிர்த்துப் பொறுமையை அனுசரிக்குமாறு கேட்டிருக்கின்றார். கார்டிவ் அதிமேற்றிராணியார் மேர்பி அடிகளார் ஆங்கில பிரதமரைக் காலந்தாமதியாது ஒரு புதுமுறையைக் கையாளும்படி விண்ணப்பித்திருக்கின்றார். இரு பகுதியினரையும் மேலும வன்முறைகளைத் தவிர்க்குமாறு பரிசுத்ததந்தையே மீளவும் பரிவுடன் கேட்டிருப்பதை யாவரும் அறிவர்.

# காலஞ்சென்ற வண. பிதா சாள்ஸ் நவரட்ணம், ஓ. எம். ஐ.

இற்றைக்கு 48வருடங்களுக்குமுன் தாம் மேற்றிராணித்துவ அபிஷேகஞ் செய்யப்பெற்ற 8-ம் நாளாகிய 1924 பங்குனி 16-ந் திகதியன்று, யாழ. மேற்றிராசனக் கோவிலில் மிகவந். கியோமார் ஆண்டகை அவர்கள் நான்கு குருத்துவ மாணவருக்கு குருப்பட்டாபிஷேகம் செய்யலாயினர். அவ்விளங் குருக்கள் யாரெனில், வண. என். யோசவ் சுவாமியார், வண. வஸ்தியாம்பிள்ளை பீற்றர் சுவாமியார், வண. வில்லியம் யேசுதாசன் சுவாமியார், வண. சாள்ஸ் நவரட்ணம் சுவாமியார், நால்வரும் அமலோற்பவ நாயகியின் தியாகிகள், இவர்களில் வண. பீற்றர் சுவாமியார் 24-2-72இல காலமாயினர். ஒரு கிழமையின் பின் அதாவது 2-3-72இல் வண. சாள்ஸ் நவரட்ணம் சுவாமியார் மரணத்திரையில் மறையலானர்.

வண. சாள்ஸ் சுவாமியார் 25-2-96இல் அச்சுவேலியில் ஓர் உத்தம கத்தோலிக்க குடும்பத்தில் தோன்றினர். ஆரம்ப கல்வியை அச்சுவேலியிலும், சம்பத்திரிசியார் கல்லூரியிலும் முடித்து, அர்ச். மர்த்தீனர் குருமடம் சேர்ந்து, கொழும்பில் வேத சாஸ்திரங்கள்கற்று 1924இல் குருவானர். தமது 48வருட குருத்துவ வாழ்வில் 24 ஆண்டுகளை சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும் விடுதிச்சாலை அதிபராகவும் கழித்தார். இவருடைய பழைய மாணவரிற் பலர் இன்று பெரும் பதவிகளில் அமர்ந்திருக்கின்றனர். சின்னக் குருமடத்தில் தொண்டாற்றிய காலத்தில் அநேக குருக்கள் சந்நியாசிகளை உருவாக்கினர் இவரின் அந்திம சடங்குகளுக்கு தலைமை வகித்த துணைஆயர் அன்ரனி ஆண்டகை இவரால் பயிற்றப்பட்டவர் விசாரணைப் பங்குகளில் சேவைசெய்த காலத்தில் ஏழை,எளியவர்களுக்கும் அனாதைகளுக்கும் விசேஷ அனுதாபம் காட்டிவந்தார்.

சிறந்த கல்விமானாகவும் அறிவு அனுபவம் நிரம்பியவராகவும் இருந்தபோதும் என்றும் தாழ்ச்சியும் கீழ்ப்படிதலும் நிறைந்த சாந்தமான சீவியததை நடத்தி எல்லோருக்கும் ஒரு மேல்வரிச்சட்டமாக விளங்கினர். குரவர் செபத்தின் வைரத்தூண். குருத்துவ வாழ்வு முழுவதிலும் நாளாந்தம் திருமணித்தியாலம் அனுசரித்து ஏனுமான நேரம் எல்லாம் திவ்வியநற்கருணைச் சந்திப்புச் செய்வது இவரின் இடைவிடா வழக்கம். பிறர்சிநேகம் குரவரின் விசேட இல்ட்சணம். எவரைப் பற்றியாவது குறைபேசுவது இவரின் வாழ்வில் எப்போதாவது இடம்பெறவில்லை. அதற்கு மாறாக மற்றவர்களின் நற்குணங்களையே எடுத்துக்காட்டுவார்.

பல வருடங்களாக உடல் நலம்குன்றி துன்பம் நிறைந்த நோய்களால் பீடிக்கப்பட்டு இரவு பகலாக அவஸ்தைப் பட்டு வந்தபோதிலும் குரவரின் பொறுமையும் புன்முறுவலும் அவரை விட்டு என்றும் அகலவில்லை. அவர் ஆற்றலும் அனுபவமும் நிரம்பிய ஓர் ஆத்தும குருவென்றளவில் அவரின் கடைசி நாட்களிலும ஏராளமான குருக்களும் பொதுநிலையினரும் அவரை நாடி வந்து கொண்டே இருந்தனர். மற்றைய நேரங்களை வறிய இளைஞருக்கும் குருமட மாணவருக்கும கல்விகற்பிப்பதிலும், மேற்றிராசன இல்லத்தோட்டத்தைப் பராமரிப்பதிலும், சிறப்பாக நல்வாசினை வாசிப்பதிலும் போக்கிவந்தார். அரை நிமிடம்தானும் உபயோகமின்றிக் கழிக்கமாட்டார்.

3-ந் திகதி நடந்த இவ்வுத்தம குரவரின கடைசிச்சடங்குகளில் பெருந்திரளான குருக்கள், கன்னியர், உறவினர், சிநேகிதர், பழையமாணவர், இளைஞர் கலந்துகொண்டனர்.

சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மனசுச் சுவாமியார்

(—எஸ். எம். ஜே.—)

(சென்றவாரத் தொடர்ச்சி)

**நீர்கொழும்பில் இறைபணி;**

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருமலை, மட்டக்களப்பு முதலாம் இடங்களில் திருப்பணி ஆற்றியபின், யாழ். ஆயர் ஆணைக்குப்பணிந்து நீர்கொழும்புக் கேகித் தமது இறுதிக் காலம் வரை ஆங்கு இணையற்ற இறைபணி ஆற்றலானுர்.

1856-ம் ஆண்டு நீர்கொழும்பு சென்ற சம்மனசுச் சுவாமியார் பிற்றிப்பனைத்தீவு, பெரியமுறுத்தானை, கொந்தமிளை, தம்பற்றை, கொச்சிக்கடை, தோப்பு, பலகத்துறை, பெரியாமூலை, மேற்கடற்கரைத் தெரு முதலாம் பங்குகளில் அயராது அரும்பணி ஆற்றினுர். நீர்கொழும்புப் பகுதியில் சுமார் 37 ஆண்டுகள் திருமறைத் தொண்டுகள் ஆற்றிய சுவாமிகளின் சேவைகள் விபரிக்கின் மிகும். எங்கு சென்ருலும் எல்லையற்ற நன்மைகளை இடையருது செய்துவந்தார். நீர்கொழும்புப் பிரதானவீதி ஆலயத்தில் பங்குக்குருவராய் இருந்தபோது முதல் ஓராண்டு காலத்தில் ஆண்களுக்குப் பாடசாலை ஒன்றும், பின் நாலுவருடங்களில் பெண்களுக்கோர் பாடசாலையும் அமைத்துக் கொடுத்தார். அவர் நீர்கொழும்பில் செய்த கணக்கற்ற நன்மைகளுள் எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றைக் குறிப்பிடுவது நலம்.

ஒரு பெண்ணை வாழவைப்பதற்காகத் தமது மாட்டுவண்டியைவிற்று உதவினுர் நீர்கொழும்புப் பெரியதெரு வாசிகளான இரு குருமாணவர்களை குருத்துவக் கல்விக்காக ரோமாபுரி அனுப்பும் பொருட்டு செலவுக்காக தமது சொந்தக் குதிரைவண்டியையே விற்ருர். இப்படியே அவரது கைம்மாறு கருதாத, தன்னலமறுப்பான தியாகங்கள் பல சொல்லில் அடங்கா.

பத்திச்சபைகள் பலவற்றை ஆரம்பித்து விசுவாசிகளுக்கு ஆன்ம வாஞ்சையும், இறைபணியில் நாட்டத்தையும், ஆர்வத்தையும் வளர்த்தார். உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களுக்காக செபிக்கும் சபையும், நன்மரணச் சபையும் சுவாமிகளால் அடியிடப்பட்ட பக்திச்சபைகளில் குறிப்பிடத்தக்கவை.

**சமூக சேவையும் பிறர்அன்பும்:**

ஆன்மீகப் பணியோடு சமூகப் பணிகளிலும், பொதுநலசேவையிலும் அதிக அக்கறை காட்டியவர் சுவாமிகள், அவர் நீர்கொழும்பில் ஆற்றிய பொதுநலப்பணிகள் குறிப்பிடற்குரியவை. ஆபத்து வேளைகளில் அண்டிவந்தவர்களையும் நோயால் வருந்தியவர்களையும் சுவாமியவர்கள் ஆதரித்து உதவிசெய்வார். 1867-ம் ஆண்டு நீர்கொழும்பில் பெரும் பஞ்சமேற்பட்டது. அப்பொழுது கடைகளில் பொருள்கள் பதுக்கப்பட்டன; உணவுத் தட்டுப்பாடு தாண்டவமாடியது. மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஏழைகள் பட்ட இன்னல்கள் சுவாமியவர்களை நெக்குருகச் செய்தது. அடிகளார் தாமே கொழும்பு சென்று தேசாதிபதியிடம் முறைப்பட்டு கடைகள்தோறுஞ்சென்று உணவுப் பொருட்களை வாங்கிவந்து வறியசனங்களுக்கு உதவி அவர்கள் பசி போக்கினுர்.

1875-ம் ஆண்டு மீண்டும் கடும் பஞ்சம் தலைகாட்டியது. அயல் ஊர்களில் உள்ள கொள்ளைக்காரர் தங்கள் கடைகளையும், வீடுகளையும் கொள்ளையடிப்பர் என்று நீர்கொழும்பு வாசிகள் மிகவும் பயந்திருந்தனர். அச்சம் மேலிட்ட மக்கள் பங்குக்குருவரிடம் வந்து முறையிட்டனர். கொள்ளைக்காரரும் வந்தனர். அடிகளார் தமது ஊன்றுகோலுடன் கொள்ளைக்காரர்முன் அஞ்சாமற் சென்ருர். அவர்களோ அவரைக்கண்டதும் பயந்து ஓட்டம் பிடித்தனர்.

வேருேர் சமயம் நீர்கொழும்பில் விஷபேதி பரவி அநேகர் இறந்தனர். செல்வந்தர்கள் ஊரை விட்டு வீடுவாசல் பொருள்பண்டம் தேட்டம் சம்பாத்தியம் யாவையும் விட்டு விட்டு அயல் ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். ஆனுல், வறியவர்களும் வசதியற்றவர்களும பசியாலும், நோயாலும் வருந்தினர். சற்குருவே அவர்களிடர் தீர்த்து ஆறுதல் அளித்துவந்தார். ஏழைகளைத்தேடி ஊணும், உடையும் கொடுத்து, மருந்துமளித்து நோயும் பிணியும், பசியும் போக்கினுர். ஒரு நாள் ஏழை முஸ்லிம் ஒருவர் தெருவோரத்தில் நோயால் வருந்துவதைக்கண்ட சுவாமிகள் அந்த நோயாளியை வண்டியொன்றில் ஏற்றி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று ஆனஉதவி செய்து, திருமறை விளக்கமும் கற்றுக்கொடுத்து ஞானத்தீட்சை அருளினுர். அந்த முஸ்லீம் பாக்கியமான மரணமடைந்தார். நீர்கொழும்பில் ஓர் ஆங்கில பாடசாலையை ஆக்கிக் கொடுத்தார். 1878-ம் ஆண்டு வண. லாம்பிறங்கு அடிகளார் சம்மனசுச் சுவாமியாருக்கு உதவிப் பங்குக் குருவராக அனுப்பப்பட்டார். அவரது உதவியுடன் நீர்கொழும்பில் ஒரு கன்னியர் மடத்தைக் கட்டிக் கொடுத்தார். இந்தமடம் இன்று புனித பிரான்சீஸ்குவின் சபைக் கன்னியர் மடமாகத் திகழ்கின்றது.

1880-ம் ஆண்டு நீர்கொழும்புப் பெரியகடையில் தீப்பிடித்துவிட வியாபாரிகள் சம்மனசுச் சுவாமியாரிடம்வந்து அபயங் கோரினர். சாமமென்றும் பாராது சுவாமியவர்கள் அந்த இடத்துக்கு விரைந்து சென்று முழந்தாள் மடித்துப் பிரார்த்தித்து ஆசீர்வதித்தார். உடனே அற்புதமாய்த் தீயணைந்துவிட மக்களெல்லாம் களிப்பும் வியப்புமடைந்தனர். இப்படியே சுவாமியவர்கள் செய்த நன்மைகளும், அற்புத உதவிகளும், புரிந்த உபகாரங்களும் சொல்லற்கரியன.

**ஞானக் கடமைகள் :**

சம்மனசுச் சுவாமியார் முதற்கண் தமது அந்தஸ்தினுல் விதிக்கப்பட்ட கடமைகள் யாவற்றையும் சுமுத்திரையாய் நிறைவேற்றி வந்தார். ஏழை நீர்கொழும்பு வாசிகள் காலை ஏழு எட்டு மணிப் பலிபூசையில் பங்குகொள்ள முடியாது கஷ்டப்படுவதை உணர்ந்து அவர்கள் நலன்கருதிகாலை நாலு மணிக்கே பலிபூசை ஒப்புக் கொடுப்பார். அவரவர் அந்தஸ்துக்கும் பொறுப்புக்கும் ஏற்ப சிறப்பாக கடமையாற்றவும், புண்ணியவழியில் நடக்கவும் மக்களைத்தூண்டி வழிநடத்துவார். ஞாயிறு கடன்திருநாட்களில் அரிய அருளுரைகள் வழங்குவார். தப்பாது பாவசங்கீர்த்தனம் அருளுவார். தபசு காலங்களில் சிலுவைப்பாதைப் பக்தியை தவருது அனுட்டிக்கத் தூண்டுவார். வருடாவருடம் அரிய களைப்பு, தூரம் என்பனவற்றைப் பொருட்படுத்தாது அவஸ்தை என்றவுடன் விரைந்துசெல்வார். சொல்லும் செயலும் ஒன்றுபட நடந்துகொள்வார். நற்புத்திமதிகளால் கல்மனமும் கசிந்திழகச் செய்வார்.

(வளரும்)

# அவர் சலுகையை நாடுவோம்!

"அவரைத் தமது வீட்டின் ஆண்டவனுக நியமித்தருளினர்; சகலமான சம்பத்துகளுக்கும் தலைவனுக அவரை நியமித்தருளினுர்." அவரை என்ருல்... ஆம், அவர் தான் புனித சூசையப்பர். அவரிடம் இரந்து கேட்பதை அடைந்துகொள்வதில் கையாளத்தகும் சூழ்ச்சிகளை நன்கறிந்த அவர் பக்தர்களில் 1937ஆம் ஆண்டு பாரகதியடைந்த சங். யோசெவ் பெசெற் பிறதரும். ஒருவர் இவர் கனடாதேச மவுண்ற் ரோயல் குன்றின் அந்திரே பிறதரென்றும், சூசையப்பரின அப்போஸ்தலரென்றும் அறியப்படுகிறவர். அவரிடமிருந்து ஒரு சலுகையை அடைவதற்குச் சரியானவழி துறையைக் கண்டறிந்தவா.

ஒரு நாள் ஒரு சீமாட்டி இந்தச் சூசைபக்தரிடம் சென்று, "பிறதர்! சூசையப்பரிடம் ஒரு சலுகையை வேண்டினேன்; ஆனுல், அதைத்தர அவர் மறுத்துவிட்டார்" என்ருள். அப்பொழுது அவர் புன்முறுவலுடன், "நீங்கள் அவரிடம் என்னென்று கேட்டீர்கள்" என்று கேட்க அவள், "அருமையான புனிதவாளரே... என்று சொல்லிக் கேட்டேன்" என்ருள். அவள் இவ்வாறு சொன்னது சொல்லாமுன் அவர் இடையிலே அவளைத் தடுத்து, "உங்கள் வேண்டுகோளுக்கு அவர் பதிலளியாதது ஆச்சரியமல்ல; போங்கள், தக்கவாறு அவருக்கு ஒரு நவநாள் செய்யுங்கள்; அவருடைய மெடல் வரவணிக்கம் ஒன்றை அணிந்துகொள்ளுங்கள்" என்று புத்திகற்பித்து அவளை வழியனுப்பினுர். அவளும் அவ்வாறு செய்தாள். அவள் மன்ருட்டு கேட்கப்பட்டது. அவளும் திரும்பிச் சென்று அவருக்கு நன்றித்துதி கூறினுள். தகுதியான—சரியான நவநாள் என்ருல் செபமாலை சொல்லு அல்லது அநேக பிரியதத்த மந்திரங்கள் சொல்வது என்பதே அந்திரே பிறதரின் சிபாரிசாகும்.

1963 ஆண்டு சூசையப்பர் புதுமாதிரி விண்ணப்பம் ஒன்றைப் பெற்ருர். கான்சர் அதாவது புற்றுநோய்கண்ட 60 வயதுக்கு மேற்பட்ட நோயாளி ஒருவர் தனது உடலின் உட்புறத்திலுள்ள புற்றுநோய்ப் பகுதியைச் சித்திகரமாக அகற்றும் சத்திரசிகிச்சை தக்கவாறு நடைபெறத் தனக்கு உதவிசெய்யும்படியும், அதற்கேற்படும் செலவுக்குப் போதிய பணத்தையும் அனுப்பிவைக்கும்படியும் சூசையப்பரிடம் மனுப் பண்ணிக் கொண்டார். அவரும் நோயாளி கேட்ட உதவியைச் செய்தருளினுர்.

அவர் குணமடைந்ததை அறியவந்த அவருடைய நண்பர் அவரைச் சந்தித்து, "உம்மைக் குணமாக்கும்படி சூசையப்பரிடம் கேட்டபோது நீர் என்ன செய்தீர்? என்று வினுவினுர். "நான் ஒன்றுமே செய்யவில்லை; எங்கள் ஆண்டவளான தேவமாதாவின் திருப்பத்தாவாகச் சகலஆட்வர்களிலும் மேலாகப் புனித சூசையப்பரைத் தெரிந்துகொண்ட இறைவனுக்கு நன்றி செலுத்துமுகமாகத் திவ்வியபூசை செய்வித்தேன்" என்று காத்திராதவிதமாக விடையிறுத்தார் குணமடைந்த புற்றுநோயாளி.

பிரான்சீஸ்கன்சபைச் சந்நியாசிகள் இருவர் சமுத்திர பிரயாணம் செய்த கப்பல் இடைவழியிலே உடைந்து சேதமாயிற்று. தேவாதீனமாக அவர்கள் இருவரும் உடைந்த கப்பலின் மரக்கண்டம் ஒன்றைத் தாபரமாகப் பற்றிப்பிடித்து மூன்றுதினங்களாகச் சீவமரணப்போராட்டம் நடத்திக் கொண்டிருந்து, கரைதுறை காணும் வகையறியாது, "சூசையப்பரே, இந்த அபாயகரமான வேளை நீர்தான் தஞ்ச"மென்று அவரை நோக்கி அபயமிட்டார்கள். அந்தட்சணமே மாட்சிப் பிரதாபமுள்ள ஒரு வாலிபர் காட்சியளித்து, அவர்களைப் புதுமையாகக் கரைசேர்த்தார். இருவரும் கரையில் இறங்கியதும் தங்களைக் காத்து வைத்தவரின் பாதங்களில் தீர்க்க தண்டமாகவிழுந்து, அவருக்கு நன்றி தெரிவித்துத் தமது நாமத்தைத் தெரிவிக்குமாறு அவரை வேண்டினுர்கள், அப்போது அழகிய அந்த வாலிபர், "நீங்கள் அபயமிட்டு உதவிக்கழைத்த சூசையப்பர் நாமே" எனப் பதிலளித்து, "நீங்கள் நமக்குச் சந்தோஷம் உண்டுபண்ணுகிறதானுல், நமது பூலோக வாழ்க்கையில் நாம் அனுபவித்த ஏழு சந்தோஷங்கள், ஏழு வியாகுலங்களின் ஞாபகமாக ஏழு பரமண்டலமந்திரம், ஏழு பிரியதத்தமந்திரம் சொல்லாது ஒரு நாளையாவது கடந்துபோக விடாதிருப்பீர்களாக!" எனக்கூறினுர். இவ்வாறு கூறியதும் சந்நியாசிகள் இருவரும் உளம்நிறைந்த நன்றியறிதலிலும், சந்தோஷத்திலும் ஆழ்ந்துநிற்க, மறைந்து போயினுர்.

## ஆசிரியரும் சம்பளமும்

தற்பொழுது நாடுமுழுவதிலும் 1,70,000 ஆசிரியசேவையில் ஈடுபட்டிருக்கிருர்கள்; கல்வி அமைச்சுக்கென்று அரசாங்கம் ஒதுக்கும் பணத்தில் 90 வீதமும் அவர்களுக்கே சம்பளமாக வழங்கப்படுகிறது; மீதியான 10வீதமுமே பாடசாலைக் கட்டடங்கள், தளபாடங்கள் ஆகியவற்றிற்குச் செலவிடப்படுகிறதென்று கல்வி அமைச்சின் மேலதிக நிரந்தரச் செயலாளர் திரு. சுமதிபால தெரிவித்திருக்கிருர்.

## 50 புதிய பஸ்கள்

வருகின்ற ஆனிமாதம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருந்த 75 பஸ்களில் 50 பஸ்கள் இம்மாதமே வருகின்றன, மேலும் இங்கே புதிதாக பஸ்நிலையங்களை அமைப்பதற்கும், மூன்று டிப்போக்களைத் திறப்பதற்கும், ஊழியர்களுக்கு வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது. மேலும் சுமார் இரண்டு லட்சம்ரூபா செலவில் யாழ்ப்பாண நவீன பஸ்நிலைய மாடிக்கட்டடவேலையும் விரைவிலே ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

## இரண்டு ருத்தல் சீனி

கூப்பன் ஒன்றுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டுவந்த 3றுத்தல் சீனி இப்பங்குனி 1ஆம் திகதி முதல் 2றுத்தலாகக் குறைக்கப்பட்டுள்ளது, கூப்பனுக்கு 3றுத்தல் வழங்கப்படுமானல் இறக்குமதி செய்யப்படும் சீனிக்கு மேலும் ஐந்தாறு கோடிரூபா கூடுதலாகச் செலவாகும். 2றுத்தலாகக் குறைக்கப்பட்டமையால் 80,000 தொன் சீனி குறைவாகவே தேவைப்படும்.

## ஆங்கிலமும் விஞ்ஞானமும்

"விஞ்ஞானத்தில் முன்னேற ஆங்கில அறிவு மிகவும் அவசியம். ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞானப்புத்தகங்களைத் தமிழ், சிங்கள மொழிகளுக்குப் பெயர்ப்பதால் காலம் கழிகிற தேயொழியச் சிறந்த பலன் கிடைப்பதில்லை. இக்கஷ்டத்தைத் தீர்க்கும் ஒரு தூண்டுகோலாக அமைகிறது புதிய கல்வித்திட்டம்" என்று ரத்திவல எனுமிடத்திலே நிகழ்ந்த ஒரு கூட்டத்தில் உதவிக் கல்விமந்திரி கூறியிருக்கின்றுர்.

## இளம் ஆசிரியைகளுக்குச் சலுகை

திருமணமாகாத இளம் ஆசிரியைகள் இனிமேல் தூரமான இடங்களுக்கோ அன்றேல் வசதியற்ற இடங்களுக்கோ கடமையாற்ற நியமனம் பெறமாட்டார்கள். இடமாற்றமும் செய்யமாட்டார்கள். கல்வி மந்திரி பிறப்பித்துள்ள புதிய உத்தரவு ஒன்றைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## குறைந்த விலையில் சீனஅரிசி

சீனுவிலிருந்து குறைந்த விலையிலே அரிசியை இறக்குமதி செய்வதற்குச் சீன—இலங்கைப் புதிய வர்த்தக ஒப்பந்தம் வழிசெய்திருக்கிறது. செலாவணி நெருக்கடியான இந்த நாளிலே கப்பல் கட்டணம் அதிகரியாதிருக்குமாறு சீனுவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் அரிசியைத் தருவிக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது. புதிய ஒப்பந்தத்தின் மூலம் 2,00 000 தொன அரிசியை வழங்கவும், 30,000 தொன் றப்பரை விலைக்கு வாங்கவும் சீனு ஒப்புக்கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மேற்றிராசன சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ். ஆசனக்கோவிலில் துணை ஆயரின் திருப்பலியுடன் யாழ்ப்பாண மேற்றிராசன சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் சம் பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் மாசி 28-ந்தேதி முற்பகல் தலைவர் திரு. வீ. ஏ. அழகக்கோனின் தலைமையில் நடந்தேறியது. இருபாலாருமான சுமார் நூறு அங்கத்தவர்கள் மேற்றிராசனத்தின் எல்லாக் கோணங்களிலுமிருந்து சமுகமளித்திருந்தனர்.

கடந்த வருடாந்த பொதுக் கூட்டக் குறிப்புகளும், வருடாந்த அறிக்கையும் செயலாளரால் வாசிக்கப்பட்டபின், துணை ஆயர் அன்ரனி ஆண்டகை அவர்கள் அங்கத்தவர்களின் கடமைகளையிட்டு உரை நிகழ்த்தினர், பின் காணும் சங்க உத்தியோகத்தரும், நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஆலோசகர்: (மேற்றிராணியாரால் நியமனம்) துணை ஆயர் அன்ரனி ஆண்டகை.

தலைவர்: திரு. வீ. ஏ, அழகக்கோன்.

உபதலைவர்கள்: திரு ஏ. ஏ. ஜோசவ், திரு. எம் ஜேக்கப், திருமதி அந்தோனியா சாமிநாதர்.

செயலாளர்: திரு. எஸ். எம். ஜே. லூயிஸ்.

உபசெயலாளர்: வித்துவான் எஸ். அடைக்கலமுத்து.

தனாதிகாரர்: திரு. பி. எஸ். திருச்செல்வம்.

**நிர்வாக சபை:**

திரு. ஜே. ஞானப்பிரகாசம், திரு. எம். பெஞ்சமின், திரு. ஏ. லாசறஸ், திரு. ஏ.ஆர். மனுவேற்பிள்ளை, திருமதி மார்கறெற் சவரிமுத்து, திரு. எஸ். ஏ. போல், திரு. ஜே. பற்றிக், திரு எஸ். எம். றிட்ஜ்வே, திரு சீ. கபிரியேல்பிள்ளை, திரு. பி. எஸ். ஜோசவ், திரு. எஸ். இராயப்பு, திரு. எஸ். லோறன்ஸ், திரு. எஸ். பி. தேவசகாயம், திரு. பி. எஸ். கிறிஸ்தோப்பர், திரு. வீ. எஸ. மிராந்தா, திரு. வீ. எம். துரைராசா, திரு எவ். வீ. மிக்கேற்பிள்ளை, திரு. எக்ஸ் ஆர். பிரான்சீஸ்.

தேர்தலின்பின் திரு. எம். விக்றர் (யாழ். ஜெயம்) அவர்களாலும், வித்துவான் எஸ். அடைக்கலமுத்து (அமுது) அவர்களாலும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியார் பற்றிய சிறந்த கருத்துரைகள் வழங்கப்பட்டன.

தலைவரின் உரையுடன் கூட்டம் இனிதே முடிவாயிற்று.

---

## நன்றித்துதி

பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்றாட்டினால் நான் கேட்டுக் கொண்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதனைப் பிரசுரம் செய்கிறேன். பிரசுர தாமதத்திற்கு மன்னிப்புக் கோருகிறேன். இன்னும் எனது குடும்பத்திலுள்ள சகல கஷ்டங்களையும் நீக்கி எனது குடும்பத்திற்குத் தேவையான சகல வரப்பிரசாதங்களையும் எங்கள் மீது ஏராளமாய்ப் பொழிந்தருளும்படி இப்பரிசுத்தர்களை வேண்டுகிறேன்.

இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

இ. திரேசம்மா
பிரதானவீதி, லெம்பேட்
பேசாலை.

---

## பதுளை மகளிர் கருத்தரங்கம்

மாசித் திங்கள் 27, 28-ந்திகதிகளில் பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் வித்தியாலயத்தை விட்டு நீங்கிய இளம்மாணவிகளுக்கென பதுளை கார்மேல்சபை கன்னியர்களால் முதன் முறையாக ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் 14, 20 வயதினர் பங்குபற்றினர். வண. பிதா பேட்டி பாத்லட் கருத்தரங்கத்திற்கு தலைமை வகித்தார். இருபெண் வைத்தியர், ஆசிரியர்களால் உரை நடத்தி எமது அறியாமையை நீக்கியதையிட்டு நன்றியறிந்துள்ளோம். இன்னும் தாயும், சேயும், நவீன சாறியணிதல், நவீன தலையலங்காரங்கள் என்பன செய்முறையால் செய்து காட்டப்பட்டன. இவ்வித கருத்தரங்குகள் வருடாவருடம் தொடர்ந்து நடைபெறுமென எதிர்பார்க்கின்றேம். இதில் 2கத்தோலிக்கர், 3 கிறிஸ்தவர்கள், 27 இஸ்லாமியர்கள், 42இந்துக்கள் கலந்து கொண்டனர். எம்மை மகிழ்வித்த அனைவருக்கும், பங்குபற்றிய அனைவர் பெயராலும் நன்றி கூறுகின்றேன்.

தெரேஸ் விக்டோரியா
பதுளை.

---

## யாழ். கொலம்பகம், ரோ. க. ஆண்கள் சாதனு வித்தியாலயம்

இவ்வித்தியாலயப் பாதுகாவலராம் புனித சூசையப்பர் திருநாள் எதிர்வரும் 19-3-72அன்று கொண்டாடப்படும். பழைய மாணவர்கள், இங்கு கற்பித்த ஆசிரியர்கள், இறையன்பர்கள் ஆகிய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

19-3-72 மு. ப. 9மணி வித்தியாலயக் கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பம்.

9-15 இறை வணக்கமும், பொதுக் கூட்டமும், மாணவர் உபசரணையும்.

10-15 விளையாட்டுக்கள். மாணவரும், பழையமாணவரும் இதிற் கலந்துகொள்வர்.

12-30 மதிய விருந்து

4-30 திருப்பலி ஒப்புக் கொடுத்தல்.

5-30 சுற்றுப்பிரகாரம்.

மதிய விருந்திற் கலந்துகொள்ள விரும்பும் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், தயவுகூர்ந்து விழாக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்க.

வெ. வில்லியம்
அதிபர்.
6-3-72.

---

✠

## முதல்வருட ஞாபகம்

### திருமதி. பிரகாசியம்மா வாஸ்

**மறைவு—13-3-71.**

மண்ணில் நின்று மறைந்தாலும் எங்கள் மனதில் நின்று மறையாத மு. பிரகாசியம்மா வாஸ் இறைவனின் பதம்சேர்ந்த முதல் வருடம் நிறைவு பெறுவதால், அன்று தினம வங்காலை புனித அனுல் தேவாலயத்தில் அவவுடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒரு துக்கப் பாடற்பூசை நடைபெறும். உங்களையும் அவவுடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளும்படி தயவாகக் கேட்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் நேசபத்தா: நீ. முடியப்புகுரூஸ், மக்கள்: மரியதாஸ், சகாயநாதன், ஜெயசீலன், மரியமலர், இருதயராணி.

வங்காலை.

---

✠

## 9-வது வருட நிறைவு

"இறைவனில் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"

**மறைவு: 8-3-1963.**

திருமறை வண. பிதா சூசைதாசர் நல்லையா சுவாமி அவர்களின் இறைவனடி சேர்ந்த ஒன்பதாவது வருட நினைவு தினம் 8-3-72.

இவர் வங்காலை பங்குவிசாரணையில் பலவருடங்களாகத் திருத்தொண்டாற்றி, தேவ அழைத்தல்களை ஊக்குவித்தவர்.

"வாழ்வில் சிநேகித்தவர்களே மரணத்தில் மறவாதீர்கள்."

நினைவு கூரும்,
வங்காலை குலாஸ்
குடும்பங்கள்.

---

✠

## திரு. ரேசாயிரே கர்த்தருள் கண்ணயர்ந்த 31-வது நினைவுநாள்

திரு. ஹென்றி லீயோ ரெசாயிரே அவர்கள் அமரத்துவமடைந்த 31ஆவது தினம் இம் மாதம் 13-ந்திகதி திங்கட்கிழமை (13-3-72) வரவிருக்கிறது. அன்று தினம் அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக ஒரு துக்கப் பாடற்பூசை, பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா ஆசனக்கோவிலில் காலை 6-15 மணிக்கு நடைபெற விருப்பதால், அவரின் இனபந்துக்கள், அன்பர்கள் அனைவரும் அப்பூசைப்பலியில் பங்கு பெற்று அவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

✠

## 14-ம் வருட மரண ஞாபகம்

"என்னுடைய சீவியம் மின்னலைப் போல் தோன்றி மறைந்தது; என் சீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும், என்னை மறவாதீர்"

பிறப்பு: 11-5-1907. இறப்பு: 10-3-1958.

**"மிகவும் மதுர யேசுவே! தேவரீர் சிலுவையில் தொங்கும் பொழுது அனுபவித்த அளவில்லாத கஸ்தி நோவுகளைப் பார்த்து எம். எஸ். பெரேரா அவர்களது ஆத்துமத்தின் பேரில் தயவாயிரும்."**

எனது அன்புமிக்க பத்தாவும், எங்கள் அன்பு நிறைந்த தந்தையுமாகிய **எம். எஸ். பெரேரா** (தலைமை ஆசிரியர்) அவர்கள் எம்மை மாருத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு அமலனின் பாதஞ் சேர்ந்த 14-ம் ஆண்டு நிறைவு தினம் இம்மாதம் 10-ந்திகதி (10-3-72) பூர்த்தியாகின்றமையால், இத்தினம் சிலாபம் புனித பெர்ணதேத்தம்மாள் தேவாலயத்தில் அவருடைய ஆன்ம சாந்தியின் நிமித்தம் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாச கன்னியர்கள், இனசனர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் யாவரும் தங்கள் செபங்களில் இவரை நினைவு கூரும்படி பரிவாய் வேண்டுகின்றோம்.

அருமைப் பத்தாவை இழந்து
பரிதபிக்கும்
**எம். மாகிறேட் பெரேராவும்**
அருமைத் தந்தையை
இழந்து துயருறும்
**பிள்ளைகளும்,**

---

## செய்திகள்:

### கூப்பனுக்கு ஒழுங்கு முறை

கூப்பன் அரிசிக்கும், மற்றும் பங்கீட்டுப் பொருள்களுக்குமாகப் பலரும் ஒரே நாளில் செல்வதாலேயே கூட்டுறவுச் சங்கக்கடைகளில் கியூவரிசைகள் நீணடுவருகின்றன. இந்த நிலைமையைப் போக்குமுகமாக ஒவ்வொரு குடும்பத்துக்கும குறிப்பிட்ட ஒவ்வொரு நாளில் அவைகளைக் கொடுக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. வருகிற சித்திரைமாத முதல் இத்திட்டம் பரீட்சார்த்தமாகச் சில பகுதிகளில் மட்டுமே நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

### அடையாள அட்டை மனுக்கள்

புதிய அடையாளக் காட்டுகளுக்கு விண்ணப்பிக்கும் பத்திரங்களை வழங்குவதற்காகக் கிராமசேவகர்கள் இம்மாத முதல் வீடுகள்தோறும் சென்று வருகிறார்கள். வீட்டிலுள்ளவர்களிலே 18வயதுக்கு மேற்பட்ட சட்டப்படியான ஒவ்வொருவருக்கும் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. பத்திரங்களைப் பூர்த்திசெய்து அதற்குரிய அதிகாரியிடம் கையளிக்கும்போது அவரிடம் பற்றுச்சீட்டு வாங்கிக் கொள்வது கட்டாயம் செய்யப்பட வேண்டியதாகும். பத்திரங்கள் கையளிக்கப்படும்போது அவரவர் புகைப்படம் எடுக்கவேண்டிய இடம், நாள், நேரம் போன்ற விபரங்கள் தெரிவிக்கப்படும். ஒரு ரூபா கொடுத்து மூன்று புகைப்படப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

### மதுபான வடிசாலை

யாழ்ப்பாணத்திலே சாராய வடிசாலை அமைப்பது சம்பந்தமாய் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஐவரைக் கொண்ட குழுஒன்றை அரசாங்கம் நியமித்திருக்கிறது. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் அதனை எங்கு அமைப்பது என்பது தீர்மானிக்கப்படும்.

### தபால், தந்திச் சலுகை

இந்தப் பங்குனி மாதம் 15ஆம் திகதி முதல் அரசாங்க திணைக்களங்கள் அனுப்பும் கடிதங்களுக்கு முத்திரை ஒட்டவேண்டும. தொலை பேசி அழைப்புகளுக்கு மாதக்தோறும் பணஞ் செலுத்தவேண்டும். இதுவரை அவைகள் அனுபவித்துவந்த இலவச தபால், தந்தி, தொலைபேசிச் சலுகைகள் இம்மாதம் 14-ம் திகதியுடன் முடிவடைகின்றன.

### வியாபார நேரமாற்றம்

யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 38 கிளை ஸ்தாபனங்களும் இனிமேல் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநேரமும் திறந்துவைக்கப்பட்டு வியாபாரம் நடைபெறும். பொதுமக்களின வசதியை முன்னிட்டுப் பரீட்சார்த்தமாகவே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற 6ஆம் திகதி முதல இந்தப் புதிய மாற்றம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்தவர்களின் வசதியையிட்டுக் காலை 10மணி முதல் மாலை 5 மணிவரை அவைகள் திறந்திருக்கும். வெள்ளிக்கிழமை இனிமேல் முழுநேர விடுமுறைத்தினமாகவும, வியாழக்கிழமை அரைநேர விடுமுறைத் தினமாகவும் இருக்கும். திங்கள், செவ்வாய், புதன், சனிக்கிழமைகளில் காலை 9மணி முதல் மாலை 6 மணிவரை அவைகள் திறந்திருக்கும்.

### வெங்காயத் தடைநீங்கியது

எவ்வளவு தொகையான வெங்காயத்தையும் இனிமேல் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்குக் கொண்டுசெல்லலாம். இதுவரை காலமும் இதற்கு விதிக்கப்பட்டிருந்த ஆனையிறவுத்தடை இம்மாத முதல் முற்றாக நீக்கப்பட்டுவிட்டது. அதனால் ஆனையிறவிலே இதற்கு எந்தவிதமான சோதனையும் இருக்கமாட்டாது.

### வானொலிப் பெட்டி லைசென்ஸ்

லைசென்ஸ் இல்லாமல் வானொலிப் பெட்டிகள் வைத்திருப்பவர்கள் கடைசித்தவணையாக இம்மாதம் 15ஆம் திகதிக்குமுன், லைசென்ஸ் எடுத்துவிடவேண்டும். லைசென்ஸ் இல்லாத வானொலிப் பெட்டி பாவிக்கிறவர்கள் கண்டுபிடிக்கப்படுமிடத்துத் தண்டனைக்குள்ளாய் ஆயிரம் ரூபாவரை தானும் அபராதம் விதிக்கப்படலாம்.

### இலவச அடையாள அட்டைகள்

அரசாங்கத்திடம் உதவிப் பணம்—தருமப்பணம் பெற்று வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு அடையாள அட்டைகள் இலவசமாக் வழங்கப்படவிருக்கின்றன. இவர்களிடமிருந்து முத்திரைக் கட்டணமாகவோ அன்றேல் புகைப்படக் கட்டணமாகவோ பணம் அறவிடப்படமாட்டாது.

---

● பிரித்தானிய தேசத்திலிருந்து வருகிற பாஸ்குத்திருநாள் வாரத்திலே வயது குறைந்த 650 பிள்ளைகளுக்கு மேல் 600 உதவியாளருடன் லூர்துபதிக்கு யாத்திரை செய்யவிருக்கின்றார்கள். 600 உதவியாளர்களிலும் டக்றர்மாரும், பல்வைத்தியர்களும், அநேக தாதிகளும் அடங்கியிருப்பார்கள்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் வூ பங்குனி மாதம் 11ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம் 1876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org